தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**9 வயதுப்பிரிவு**
(01.01.2015 – 31.12.2015 வரையில் பிறந்தோர்)

## தமிழீழ வைப்பகம்

“தன்னிறைவான, தன்னில் தானே தங்கி நிற்கின்ற பொருண்மிய வாழ்வுடைய சமுதாயமாக எமது தேசம் உருவாக வேண்டும்” என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கு அமைவாகத் தோற்றம்பெற்றதே தமிழீழ வைப்பகம். இது தனது சிறப்பான செயற்பாடுகளால் தமிழீழ மக்களின் பொருண்மியத் தேவைகளுக்கு உதவியது. அதனால், அம்மக்களின் நம்பிக்கையைப் பெற்றது.

1994 ஆம் ஆண்டு மே 23 ஆம் நாள் தமிழீழ வைப்பகத்தின் முதற்கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பெற்றது. “தமிழீழ வைப்பகம் தமிழரது காப்பகம்” என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு தமிழர் தாயகப் பகுதிகளில் பல கிளைகளை அமைத்து 2009 ஆம் ஆண்டு வரை சிறப்பாகச் செயற்பட்டது. இவ்வாண்டு அதன் முப்பதாவது ஆண்டாகும்.

நிலையான வைப்புகள், நடைமுறைக் கணக்குகள், குழந்தைகளுக்கான சேமிப்புகள், வெளிநாட்டு நாணய மாற்று, கடன்கள் எனப் பல்வேறு திட்டங்களை உருவாக்கி, நேர்த்தியான சேவையை மக்களுக்கு வழங்கியது. திட்டமிட்டு அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருண்மிய இருப்பைக் கட்டியெழுப்புவதற்கும் உதவியது.

காவலரோ, கண்காணிப்புக் கருவியோ வைத்திருக்காமல் ஈழத்தீவின் பாதுகாப்பு மிக்க வைப்பகமாகத் தமிழீழ வைப்பகம் திகழ்ந்தது. இதனை சர்வதேச செய்தி நிறுவனமொன்று பதிவுசெய்திருந்தது. எமது தாய்நாடு மீட்கப்படும்போது மீண்டும் தமிழீழ வைப்பகம் தன் சேவையை வழங்கும் என்பது திண்ணம்.

நன்றி,

வணக்கம்.